## ஊவபரணகம பிரதேச சபை

## பதுளை மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 15 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்டம்பர் 06 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஊவபரணகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(அ) வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தில் இருந்து 2014 ஆண்டின் போது சபைக்கு வழங்கியிருந்த ரூபா 403,316 தொகைக்கான 408 கல்வணய்ஸ் கொடிக்கம்பங்களின் பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் ரூபா 255,038 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபைக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 3,562,252 தொகை பெறுமதியினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 65,073 தொகையான காகிதாகிகள் இருப்பினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) நீர்த் திட்டம் மற்றும் கொங்கிரீட் அச்சுக்கற்கள் செயற்திட்டம் தொடர்பான ரூபா 502,244 தொகையான இறுதி இருப்பு ரூபா 5,293,786 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது புனர்நிர்மாணம் செய்யப்பட்ட பிரதேச சபைக் கட்டிடம் தொடர்பாக 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த ரூபா 764,238 தொகைக்கான சிட்டைகளின் பெறுமதிக்காக வருட இறுதியில் ரூபா 1,749,289 தொகைக்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,642,001 இற்கான பலவின வைப்புக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் ரூபா 551,553 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 2013 மற்றும் 2014 ஆண்டுகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 103,825 இற்கான கணக்காய்வுக் கட்டணத்தை ஆண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) 2013 ஆண்டின் போது ரூபா 9,281,250 தொகை செலுத்தி கொள்வனவு செய்திருந்த லுனுவத்த காணியின் பெறுமதியை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஐ) 2012 ஆண்டு தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 1,961,125 இற்கான நீதி மன்றத் தண்டப் பண வருமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

(அ) பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 31,528,584 தொகையான ஒப்பந்தக் கடன்கொடுத்தோர் மீதி நிதிக் கூற்றுக்களில் ரூபா 20,728,584 தொகை எனக் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 10,800,000 தொகையான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 986,819 தொகையான தீர்க்கப்படாத முற்பணங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களின் ரூபா 4,178,495 தொகை காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 3,191,676 தொகைக்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 36,301,876 தொகையாகக் காணப்பட்டதுடன் அத் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 23,058,729 ஆக இருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டம் மற்றும் 2008 ஜனவரி 25 திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் | 2015 ஆண்டிற்காக சுற்றாடல் சார் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய 23 நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமல் வர்த்தக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை XXIV ஆம் அத்தியாயம் 4 ஆம் பிரிவு | சேவையை விட்டுச் சென்றிருந்த மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்றிருந்த இரண்டு உத்தியோகத்தர்களிடம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 220,454 தொகையான பதவியணிக் கடனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | 2009 செப்டம்பர் 18 திகதிய PF/437 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | அனைத்து அரச மற்றும் அரை அரச நிறுவனங்களினதும் காப்புறுதி பாதுகாப்பு ஒன்றினை பெற்றுக்கொள்ளும் போது தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் இருந்து அல்லது வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் இருந்து மாத்திரம் நேரடியாக பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும் சபையினால் 07 மோட்டார் வாகனங்களுக்காக காப்புறுதி முகவர் ஒருவர் மூலம் காப்புறுதி பாதுகாப்பு பெறப்பட்டிருந்தது. |

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்க்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,882,900 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,143,360 ஆக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

------------------------------

நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

(அ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 5,000,000 தொகையும் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 8,259,509 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) 2013,2014 மற்றும் 2015 ஆண்டுகளுக்கான நீதி மன்றத் தண்டப் பட்டோலை தயாரித்து சபைக்கு உரிய வருமானத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

செயற்பாட்டுத் திறமையின்மை

-------------------------------------------------

ரங்ஹுவடிகம கடைகள் நிர்மாணிப்பதற்காக சபைக்குச் சொந்தமான காணித் துண்டுகளை குத்தகைக்கு கொடுப்பதற்காக 09 குத்தகையாளர்களிடம் 2005 மற்றும் 2006 ஆண்டுகளின் போது அறவிடப்பட்டிருந்த வாடகை ரூபா 124,000 தொகையினை குறிப்பிட்ட வருடத்தின் வருமானம் என கவனம் செலுத்தாமல் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

மீளாய்வாண்டின் போது பாதீடு, வருமானங்கள் மற்றும் செலவுள் கட்டுப்பாட்டின் போது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

------------------------------------------------

மீளாய்வாண்டின் போது வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று செயற்படுத்தியிருக்கவில்லை.

4.3 அகக் கணக்காய்வு

---------------------------------

2015 ஆண்டிற்காக போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்

--------------------------------------------------------------------------------------------------

நடைமுறை ஆண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தியிருக்கவில்லை.

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

--------------------------------------------------

விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------

இராணுவ நடவடிக்கைகளுக்காக தரைப் படைக்கு ஒப்படைக்கப்பட்டு 2015 மே 26 திகதி திருப்பி ஒப்படைத்திருந்த கப் வண்டி பாவணைக்கு உகந்ததாக இருக்காமையால் ஓட்ட நிலையில் இருந்து அகற்றியிருந்த போதிலும் 2015 ஜூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அகற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்

(உ) தொக்குக் கட்டுப்பாடு